1979 மார்ச் 31]

ரிபேட் பற்றியல்ல. பொருட்காட்சியிலே தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஸ்டால்கள் கொடுக்கப் படவேண்டும். ஆனால் தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படாமல், ஸ்டால்கள் போட காலி இடங்கள் இருந்தும் அவர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட குறைபாட்டை—நான் ஏற்கனவே இதுபற்றி திரு ராதாவிடம் கூடச் சொன்னேன்—ஆகவே அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி, விளம்பரத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு பேர்களுக்கும் கொடுப்பதற்கு எதிர்காலத்திலே நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நடந்த பொருட்காட்சிபற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு நடைபெறுகிற பொருட்காட்சி கூட்டுறவுக் கைத்தறி வார விழா என்ற முறையிலே தான் நடத்தப்படுகிறது. ஆகவே அதிலே தனியார் துறைக்கு இடம் அளிக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றப் பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் இன்றைக்கு வர இருக்கிற அந்த மானியத்திலே பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

வேலூர் சர்க்கரை ஆலை.

*வினா எண். 580— திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு சப்ளை செய்ய ஒப்பந்தம் செய்த விவசாயிகளுக்கு கடன் தருவதாக ஒப்பந்தம் பெற்றும் பல மாதங்களாக கடனும் உரமும் தரப்படாமல் இருக்கின்றது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசாங்கம் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) இல்லை. பொதுவாக விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுவதில் காலதாமதமேற்படுவதில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

[1979 மார்ச் 31

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு விடை எழவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு பெர்சனல் எக்ஸ்பீரியன்ஸே இருக்கிறது. ஏற்கனவே 25 ஷேர்கள் எடுத்துவிட்டு, என்னுடைய தகப்பனாரே சுற்றிச் சுற்றி வந்தும் பணம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனக்கே இந்த நிலைமை இருப்பதால், சாதாரண ஏழைகளுக்கும் இந்த கஷடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படியில்லை என்றால் மனமார வரவேற்கிறோம். இன்னொன்று கேட்க விரும்புகிறேன். 9.8 ரெக்கவரி என்று...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி நீண்டதாக இருக்கக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு 63·50 கொடுக்கப்படுவதாக சொல்கிறார்கள், அதை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? விலை வீழ்ச்சி அதிகமாக இருப்பதால் ஓரளவிற்கு வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலைக்கு கரும்பை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விலையைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தர இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த அனுபவத்தைப் பற்றிச் சொன்னார்கள். எம். ராஜு கவுண்டர் என்பவர் 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி அன்று 4,500 ரூபாய் கடன் வேண்டுமென்று மனு போட்டார். 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதி அன்று அது கூட்டுறவு பேங்குக்கு அனுப்பப்பட்டது. பணம் கிடைக்கவில்லை என்று 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் நாளில் மீண்டும் மனுச் செய்தார்கள். பரோடா பேங்கிலிருந்து கடன் அளிக்கப்பெற்றது. கூட்டுறவுத் துறையை விசாரித்ததில் அவர் இரண்டு சங்கங்களிலிருந்து கடன் பெறும் சூழ்நிலை இருந்ததால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது என்று கூறியிருக்கிறார்கள்.

Nylon Industry in Andipatti Constituency.

*Q. No. 581—Thiru K. KANDASAMY ; Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) whether there is any proposal to start a Nylon Industry near Vaigai Dam in Andipatti Constituency, Madurai district; and

(b) if so, the details thereof ?